பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்
New Eelam Jewellery Mart
No.423,(247)K.K.S Road,
Sivan Kovi'addy Jaffna.
(சண்முகம் சேனீர்ச் சாலைக்கு அருகாமையில்)
Prop/ AJAKOPAL CHANDRAN

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்!
நியூ ஈழம் ஜுவெல்லரி மாட்
இல 423 (247)
கே. கே. எஸ் வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ௵ பங்குனி ௴ 21 ௳ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 15 (03 04 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:4 4

யாழ். மக்களுக்கு இப்போது வந்துள்ள ‘சுரண்டல்’ மோகம்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

யாழ்ப்பாண மக்களுக்கு இப்போது புதிதாக ஒரு ''சுரண்டல்'' மோகம் பிறந்திருக்கிறது!

என்ன அது என்று யோசிக்கிறீர்களா? அதிர்ஷ்டச் சீட்டு சுரண்டும் மோகந்தான் அது!!

'மகாபொல', 'செவண' போன்ற சுரண்டி அதிர்ஷ்டம் பார்க்கும் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் பெருமளவில் விற்பனையாகின்றன

5 ரூபா, 10 ரூபா விலைகளில் உள்ள இந்தச் சீட்டுக்களை நகரின் சந்திகளில் நின்று பெரும் எண்ணிக்கையான மக்கள் சுரண்டுவதைக் காணக்கூடியதாக உள்ளது

சுரண்டலின் மூலம் சிறு தொகைப் பரிசுகள் சிலருக்குக் கிடைத்தாலும்—

இங்கு பெருந்தொகையான பணத்தொகையைக் கொண்ட பரிசில்கள் இதுவரை எவருக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

தென்பகுதியில் இந்தச் சுரண்டல் சுவீப் பெரும் எண்ணிக்கையில் விற்பனையாவது குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

பரீட்சையை நடத்துக! மாணவரைவிடுவிக்குக!!

வட்டு. மாணவர் மகஜர்

வட்டுக்கோட்டை ஏப். 3

1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையை உடன் நடத்தக் கோரியும் இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு இணங்க சிறையில் உள்ள மாணவர்களை விடுதலை செய்து அவர்கள் பரீட்சை எடுக்க வழிவகுக்கக் கோரியும் வட்டுக்கோட்டைத் தொகுதி பாடசாலை மாணவர்கள் மகஜர்களை சமர்ப்பித்துள்ளனர்.

பரீட்சையை நடத்தக் கோரும் மகஜர் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளருக்கு கொடுக்கப்பட்டது

மற்றைய மகஜர் யாழ் அரசாங்க அதிபரிடம் கொடுக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, அராலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் இளைஞர்கள்

எல்லோரையும் ஒன்றாக

விடுதலை செய்ய வேண்டும்

தாமதிப்பதில் நியாயமில்லை என்கிறார் குமார் பொன்னம்பலம்

— கொழும்பிலிருந்து: எஸ். ஈ. நாதன் —

கொழும்பு, ஏப்ரல் 3

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் - தமிழ் இளைஞர்கள் - எல்லோரையும் ஒரேயடியாக விடுதலை செய்யவேண்டும். தொகுதி தொகுதியாக விடுதலை செய்வது என்பது அர்த்தமற்றது.

அவர்களை விடுதலை செய்வதை இனியும் தாமதிப்பதில் எந்தவிதமான நியாயமும் இருக்கமுடியாது.

இவ்வாறு தமிழ் அரசியற் கைதிகளின் சார்பில் பல வழக்குகளில் ஆஜராகி வருபவரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான திரு. குமார் பொன்னம்பலம் உதயனுக்குத் தெரிவித்தார்

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

பூஸா முகாமில் உள்ள 900 தமிழ் அரசியல் கைதிகளின் சத்தியக் கடதாசிகள் பெறப்பட்டுள்ளன.

அவர்கள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாக தமது சத்தியக் கடதாசியில் தெரிவித்துள்ளனர்.

ஆகையால் இவர்களை விடுதலை செய்வதை இனியும் தாமதிப்பதில் எவ்வித அர்த்தமும் இருக்க முடியாது. அவர்களை ஒரேயடியாக விடுதலை செய்யாமல் இருப்பதற்கு எவ்வித நியாயமும் இருக்க முடியாது.

பூஸா முகாமில் உள்ள 900 தமிழ் இளைஞர்களையும் இவ்வாரத்தில் சந்திக்க உள்ளேன் அவர்கள் விரைவில் விடுதலையாவார்கள் என்றே நம்புகிறேன் — என்றும் அவர் தெரிவித்தார்

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் அரசியற் கைதிகளை தொகுதி தொகுதியாகவும் குறிப்பிட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களை முதலிலும் விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

சனியன்றும் வேலை

யாழ் செயலகத்தின் ஓய்வூதியப் பிரிவு நேற்று சனிக்கிழமையும் இயங்கியது.

மார்ச் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகளை விரைவில் கொடுக்கும் முகமாகவே இப்பிரிவின் உத்தியோகத்தர்கள் சனியன்றும் கடமைக்கு வந்தனர். (ஒ-10)

மேலும் 17 பேர் கொலை

கடந்த வெள்ளிக்கிழமை இரவும் பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகளினால் பதினேழுபேர் கொல்லப்பட்டனர்

இவர்களில் இரண்டு பேர் பெண்கள். [ஒ-எ]

கல்முனைச் சம்பவம்; ஈரோஸ் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப் 3

அண்மையில் கல்முனையில் நடந்த சம்பவங்களைக் கண்டித்து ஈழப் புரட்சி அமைப்பு ஈரோஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்முனையில் அண்மையில் நடந்த கறைபடிந்த சம்பவங்களை நாங்கள் எண்ணி வெட்கித் தலைகுனிகின்றோம் இதன் பின்னணியில் உள்ள சக்திகள் அம்பலப்படுத்தப்படுவதோடு தனிமைப் படுத்தப்பட்டுக் கண்டிக்கப்பட வேண்டும்

ஆரம்பகாலத்தில் இருந்தே தமிழ் பேசும் மக்களின் தலைமைகள் விட்ட தவறுகளினாலும் இலங்கை அரசின் திட்டமிட்ட சதிநடவடிக்கையாலு கிழக்குத்தமிழ்பேசும் மக்களிடையே பரஸ்பரம் சந்தேக நிலைமைதோற்றுவிக்கப்பட்டது.

இச்சந்தேகங்களைக் களைந்து ஒருமைப்பட வேண்டிய நிலையில் கல்முனையில் அண்மையில் நடந்த சம்பவங்களின் பின்னணியில் எவரிருந்தாலும் அவற்றை வன்மையாகக் கண்டிக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

லயனல் விஜயம்

எம்பி. குடும்பமும் முகாமில்

கொழும்பு. ஏப். 3

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் லயனல் ஜெயதிலக்க நேற்று காலை கல்முனைக்கு விஜயம் செய்து அகதிகள் நிலைமையை நேரிற் பார்வையிட்டார்

அமைச்சருடன் கல்முனை எம் பி ஜனுப் ஏ ஆர் மன்சூரும் சென்றிருந்தார்.

இதனிடையில் ஜனுப் மன்சூர் கொழும்புச் செய்தியாளருக்குத் தகவல் தருகையில் 'எனது மனைவியும், குடும்பமும் அகதிகள் முகாமில் இருப்பதாக அறிகின்றேன். அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு என்ன கஷ்டங்கள் இருக்கின்றதோ நான் அறியேன்' — என்று சொன்னார்..

கல்முனையிலுள்ள இந்திய அமைதிப்படையின் உயர் அதிகாரிகளை மாற்றும்படி பிரபல முஸ்லிம் தலைவர் ஒருவர் இந்தியத் தூதரைக் கேட்பார் என்றும் ஜனுப் மன்சூர் தெரிவித்தார். (அ-எ)

7 தமிழரும் உயிரிழந்தனர்

கொழும்பு. ஏப். 3

கல்முனைப் பகுதியில் மளிகைக்காடு. சாய்ந்தமருது கிராமங்களில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்தவர்களில் 10 பேர் முஸ்லிம்கள், 7 பேர் தமிழர் என்று அறிவிக்கப்படுகிறது

உயிரிழந்த தமிழர்களில் நான்குபேர் இலங்கைப் பொலிஸார் சூட்டில் மரணமானார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

படிவத்தின் விலை ரூபா பத்து!

யாழ்ப்பாணம் ஏப் 3

பாஸ்போர்ட் பெறும் விண்ணப்பப் படிவங்கள் பத்து ரூபா முதல் பதினைந்து ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன

யாழ் - செயலக முன்றலிலும் தனியார் கடைகளிலுமே இந்தப் படிவங்கள் பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் பாஸ்போட் விண்ணப்பப் படிவம் ஒரு ரூபாவுக்கு வழங்கப்படுவது தெரிந்ததே. (ஒ-10)

பல்கலைக் கழக மாணவர் 26 பேரை விடுவிக்க ஜே. ஆர் உத்தரவு

கொழும்பு, ஏப் 3

தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்களில் 26 பேரை உடனடியாக விடுவிக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா உத்தரவிட்டார்.

வெளிநாட்டுஅமைச்சர் சாகுல் ஹமீதுவின் சிபார்சுக்கிணங்க, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக வெளிநாட்டமைச்சின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

ஜனாதிபதியின் உத்தரவு சட்டமா அதிபருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது

பல்கலைக் கழக மானியக் கமிஷன் உறுப்பினர்கள் முன்னிலையில் பெற்றோர்களிடம் மாணவர்கள் ஒப்படைக்கப்படுவர்

41 பல்கலைக்கழக மாணவர் தற்சமயம் தென் இலங்கைத் தீவிரவாத சம்பவங்கள் தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலருக்கு எதிராக சாட்சியங்கள் இருக்கின்றன. என்று பொலிஸார் தெரிவித்தனர் [ஒ-எ]

அந்தப் பெரிய சத்தம்!

பெரிய வெள்ளியன்று இரவு சுமார் ஏழு மணியளவில் கேட்ட பெரிய சத்தத்தால் யாழ்நகர் அதிர்ந்தது.

இதனால் மக்கள் பதற்றம் அடைந்தனர்

தேவாலயங்களில் ஆராதனையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் கிலிகொண்டு வீடுகளை நோக்கி விரைந்தனர்

குருநகரை அண்டிய சிறுத்தீவுப் பகுதியிலிருந்தே இந்தச் சத்தம் கேட்டதாக அறியவருகிறது (ஒ-51)

பஞ்சாப் எல்லை மூடப்படும்

பாகிஸ்தானுடனான பஞ்சாப் எல்லை முற்றாக மூடப்படும்.

முட்கம்பி வேலியும் போடப்படும்

இப்படி உள்துறை

(6ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு நகரில் பாதுகாப்புப் படைகள் உஷார் நிலையில்!

கொழும்பு, ஏப் 3

கொழும்பு மாநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

1971 இளைஞர் கிளர்ச்சியை நினைவுபடுத்தக்கூடியதான நடவடிக்கைகளில் மக்கள் விடுதலை முன்னணியும் அதன் இராணுவப் பிரிவான 'தாயகம் காக்கும் முன்னணி'யும் ஈடுபடலாம் என்று கருதியே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

1971 ஏப்ரல் 5 இல் மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுதக் கிளர்ச்சி தொடங்கியது.

வடமத்திய மாகாணத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன. (ஒ எ)

தாமரைக்கு வந்த தடை!

கொழும்பு, ஏப் 3

கண்டி தலதா மாளிகையினுள் தாமரை மலர்கள் கொண்டு செல்வதற்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுமதி அளிக்கப்படவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இத்தடை விதிக்கப்பட்டது என்று தலதா மாளிகைப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (ஒ-எ)

யாழ்.வாசிகள் பிறப்புச் சான்றிதழ்

கொழும்பில் மீள்பரிசீலனை!

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணத்திற் பெறப்படும் பிறப்புச் சான்றிதழ்ப் பத்திரங்கள் கொழும்பு பதிவாளர் அலுவலகத்தில் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

யாழ். செயலகத்திலிருந்து பல பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரப் புத்தகங்கள் காணாமற்போனதை அடுத்துப் போலிப் பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்கள் தாராளமாகப் புழக்கத்தில் இருப்பதே இந்த மீள்பரிசீலனை நடவடிக்கைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

பாஸ்போட் பெறத் தாமதம்

— அலுவலகச் செய்தியாளர் அகிலராஜ் —

கடந்த வாரத்தில் இவ்வாறு ஐம்பதுக்கும் மேற்பட்ட பிறப்புப் பத்திரங்கள் கொழும்பு பதிவாளர் திணைக்கள அலுவலகத்தில் மீள்பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

பாஸ்போட், அடையாளக்கார்ட் ஆகியவற்றைப் பெறுவதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து விண்ணப்பித்த பலரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களே இவ்வாறு மீள் பரிசீலனைக்கு கொழும்பு பதிவாளர் அலுவலகத்துக்கு அந்தந்த திணைக்களங்களினால் அனுப்பப்பட்டுள்ளன

இதனால் பாஸ்போட் மற்றும் அடையாளக் கார்ட்டுகளைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகப் பாதிக்கப்பட்ட ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார் [ஒ-10]

இவர்கள் நிலை என்ன?

யாழ்ப்பாணம், ஏப். 4

நகைகளை மீளப் பெறுவதற்கு உரிய பணத்தைச் செலுத்தாதவர்களின் நிலை என்ன?

இன்று வரைக்குமான வட்டியைச் செலுத்த வேண்டுமா?

அப்படி வட்டியைக் கட்டுமாறு கேட்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களின் நிலை என்ன?

இவற்றை ஆராய்வதற்காக நகைகளை அடகு வைத்தோரின் சந்திப்பு ஒன்று எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

சைவ பரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

மேற்படி விடயங்களில் அடகு வைத்தோரின் கருத்தை அறியும் பொருட்டே இச்சந்திப்பு நடைபெற உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (ஒ-க)

முச்சந்தி முரளி



தமிழ்ச் சனம் படுகிற பாடுகளிலை சுரண்டல் மோகமும் ஒண்டு அவசியமே..? அருமந்த காசைக் கரியாக்கிற புத்தி ஏன் தானோ உவையளுக்கு . . . ?

அமைச்சர் அவர் தெரிவிக்கும் ஒரு யோசனை!

கொழும்பு, ஏப். 3

ஆயுதங்களை ஒப்படைப்பதாக வட, தென் பகுதித் தீவிரவாதிகள் உறுதிமொழி தந்தால் ஜனாதிபதியின் சார்பில் நான் அவர்களுடன் பேசத் தயாராக உள்ளேன்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் லயனல் ஜெயதிலக முன்கண்டவாறு தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசினார்.

இந்த வேண்டுகோளை பொறுப்புணர்ச்சியுடன் தான் விடுப்பதாக அவர் மேலும் சொன்னார். (ஒ-எ)

சுபநேரம்

3 - 4 - 1988
பங்குனி 21
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்
9 10 முதல் 10.40வரை
ராகுகாலம்
4 40 முதல் 6 10வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
காரைக்காலம்மையார் குருபூசைத்தினம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★ சின்னஞ் சிறு விளம்பரம் ★★★

விற்பனைக்கு

சொனி நாஷனல் ரெலிபாகன் குறிண்டிக் சன்யோ, பிலிப்ஸ், ரியூப் Fly Back ரியூனர் மற்றைய சகல உதிரிப்பாகங்கள் நாஷனல் 300, 370, 7500, 250 Funai. Akai ஆகியவற்றின் வீடியோ டெக். ஓடியோ டெக் Re converter மோட்டர் மற்றைய உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [2368]

Sisil R 60 குளிர்சாதனப்பெட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்க. A Rasanayagam 26. St Benedicts, Nallur, Jaffna.

Uplands Farm Ltd கோழிக் குஞ்சுகள், 6 04-88 புதன்கிழமை இரண்டுமாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக்கூடிய (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ 4 00 முன் கூட்டியே பதிவுசெய்க No 9 குராவத்தை ரோட், கந்தையா லேன் சுன்னாகம் ஸ்டேசனுக்கு அருகாமையில், (2708)

Uplands Farm Ltd கோழிக் குஞ்சுகள் 12 - 4 - 88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (Lohmann) பிறவுன் பேடு ரூ 12 - 50 (Lohmann) சேவல் ரூ 4-00 (செண்டு வெட்டப்பட்டது. தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்யவும். இல. 9, குராவத்தை ரோட்டு (கந்தையா லேன) சுன்னாகம் (ஸ்டேசனுக்கு அண்மையில்) (2726)

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (2715)

கைலேன் வெள்ளைப் பேடு புரொயிலர் கறுப்புச் சேவல், பிறவுண் பேடு 5 - 4 - 88 இலும் 8 - 4 - 88 இலும் விநியோகிக்கப்படும். விபரங்களுக்கு (1 R S.K FARM முருகபதி உடுவில் (2) குபேரன் ஸ்ரோஸ், கொக்குவில் சந்தி கொக்குவில் (3) FARM HOUSE, கோட் ரோட், மல்லாகம் (4) RED ROSE FARM, தெணியம்பை வல்வெட்டித்துறை, (5) கோகிலாகூல் பார், கொடிகாமம், (2291)

கைலேன் வெள்ளை கறுப்புப் பேடு 5/4 இலும் 8/4 இலும் 12/4 இலும் விநியோகிக்கப்படும். விலை 13/-. 500 குஞ்சுகளுக்கு மேல் எடுப்பவர்கள் 12-50. முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு இணுவில் வீடியோ சென்ரர், இணுவில். R. S. K. FARM, UDUVIL. (2291)

TRAINNING

Computer Trainees பலர் உடன் தேவையாதலால், ஏற்கனவே 'Basic' Programming பயின்றவர்களுக்கு குறுகிய கால சிறப்புப் பயிற்சி I B M Computerகளிலும் 450 ரூபா கட்டணத்தில், 4-4-1988 (2-30 p.m.) இருந்து ஆரம்பமாகின்றது தொடர்புகளுக்கு:- IDP Tellippalai.

தேவை

சகல வின ரியூப் உடைந்த, இருக்க முடியாத ரெலிவிஷன், வீடியோ டெக் கஸற் ரேடியோக்கள் உடன்தேவை விபரங்களுக்கு Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி [றெயில்வே கடவையருகில்] யாழ்ப்பாணம். [2367]

1. பெண் காசாளர் ஒருவர், 2 குளிர்சாதனப் பெட்டி (Fridge) திருத்தக் கூடிய மெக்கானிக் நேரில் வரவும் Omega Manipay Road, Jaffna. (2353)

மணமகன் தேவை

வேளாள கிறிஸ்டியன் மணப்பெண்ணுக்கு 34 வயதுக்கு உட்பட்ட படித்த வேலையற்றவராயின் பரவாயில்லை) மணமகன் தேவை கனடாவுக்கு கூட்டிச் செல்லலாம் கிறிஸ்தவர் அல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். [2357]

பங்காளர் தேவை

நல்ல நிலையில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு ரூ 30.000/- முதலிடக் கூடிய பங்காளர் தேவை. கிறிஸ்தவராயின் விரும்பப்படுவர். ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்கவும். விள. இல 118 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [2236]

TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

போட்டோ ஸ்ரட்

யாழ்நகரில் தரமான ''போட்டோஸ்ரட்'' பிரதிகளுக்கும் தெளிவான 'ரோனியோ' வேலைகளுக்கும்'' சிறந்த முறையிலான தமிழ், ஆங்கிலம் 'ரைப்பிங்' வேலைகளுக்கும் என்றும் நம்பிக்கையான நிறுவனம்; கிளின்கட், இல; 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நூல்

சமூகக்கல்வி ஆண்டு 10, 11 தேசப்பட வேலைக்குரிய வழக்கக் குறியீடுகள் உரிய நிறங்களோடு வெளிவந்துள்ளது. க. குணராசா (M.A.) தயாரித்தது ஸ்ரீலங்கா புத்தகசாலை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [2351]

காணவில்லை

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய ஆசிரியை ஜசிந்தா சின்னத்தம்பியின அடையாள அட்டையும் ஒப்படைப்புப் புத்தகமும் கொண்ட கபிலநிற கான்பாக் (Hand Bag) காப்புறுதிக் கட்டிடத்திற்கும் பெரியாஸ்பத்திரிக்கும் இடையில் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் உதயன் காரியாலயம் அல்லது 601/1 Hospital Road இல் உள்ள இல்லத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். நன்றி சன்மானம் வழங்கப்படும். (2287)

வகுப்புகள்

G C. E. A/L 89ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன, 6, 7 8, 9, 10ஆம் வகுப்புகளுக்கான ஆங்கில வகுப்புகளும் மற்றும் விசேட ஆங்கில வகுப்புகளும் ஆரம்பம் 1-4 88 விபரங்களுக்கு சென் மேரிஸ் இன்ஸ்ரிரியூட், பனோஜராச் சந்தி. 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2718)

காணவில்லை

வெள்ளை நிற யூலி என்ற பெயர் கொண்ட பொமேரியன் நாய்க்குட்டியை 30-03-88 முதல் காணவில்லை ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம், சதி வேலு இராஜலிங்கம் சுதுமலை தெற்கு சாவற்காட்டு மானிப்பாய். (2299)

தவறிவிட்டது

திரு துரைமணி சாம்பல்தீவு, திருகோணமலை என்று விலாசமிடப்பட்ட அடையாள அட்டை நல்லூர் கோயிலுக்கு அருகாமையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் [2375]

I. C No. 696710864V இலக்கமுடைய எனது அடையாள அட்டை 7/3/1988 ல் கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் New Starleys 95/ . Stanley Road, விலாசத்தில் ஒப்படைக்கவும். [2377]

சபாபதி ஏகாம்பரம் என்பவருடைய அடையாள அட்டை திருநெல்வேலியில் தொலைந்து விட்டது. தயவு செய்து உதயன் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவி புரியவும் (2360)

செல்வி சி. சாந்தி என்பவர் உடைய அடையாள அட்டை தொலைந்து விட்டது இல. 705130051 V C/o திருபதி S தியாகராஜா 196/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2361)

1402292253X இலக்கமுடைய அடையாள அட்டையை பருத்தித்துறை பஸ்ஸில் சென்றபோது காணவில்லை. கண்டெடுத்தவர்கள் செ. பாலசிங்கம் குணகலா மில் ஒட்டிசுட்டான் என்ற விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும். (2298)

T. சுசிலா தம்பிராஜா என்பவருடைய அடையாள அட்டையை காணவில்லை இல. 586311522X கண்டெடுத்தவர்கள் உதயன் அலுவலகத்தில் அல்லது இல. 11 சிராம்பியடி லேன் யாழ்ப்பாணம் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2366)

கறுப்பையா பாலகிருஷ்ணன் ஆகிய நான் அடையாள அட்டையையும் வாகன சாரதிப்பத்திரமும் 28-3 88 இல் செம்மா தெரு ஒழுங்கையில் தவறவிட்டு விட்டேன் கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (2373)

மணமகள் தேவை

இந்து வேளாள அரச பதவியில் 2, 500/- க்கு மேல்மாதசம்பளம் பெறுபவருக்கு கௌரவமான குடும்பத்திலிருந்துகுமார் 30 33 வயதுக்காகவும் மணமகள் தேவை. சற்று உயரம் நன்று. குறைந்தளவு செவ்வாய்குற்றம் இருப்பினும் கூட விண்ணப்பிக்கலாம். எண் சோதிட முறையில் 4. 2. 1. இலக்கங்கள் விரும்பப்படுகிறது. தயவு செய்து சாதகபிரதியை அனுப்பவும் C/o உதயன் விளம்பர இல 122, [2383]

கோழிக்குஞ்சு விநியோகம்

Hy-Line ஹைலைன் கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். ஒரு மாத கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா and பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில் 2381]

பொலீஸ் ஜீப்மீது கிரனேட் வீச்சு

கொழும்பு, ஏப். 3 திருமலை நகரில் ரோந்து சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா பொலிஸ் ஜீப் மீது கிரனேட்டுக்கள் வீசப்பட்டன.

மூன்று பொலீஸார் இதில் படுகாயமடைந்தனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் ஜீப்பில் ஐந்து பொலீஸார் இருந்தனர் [இ-எ]

ஆசிரியருக்கான சேவைக்காலப் பயிற்சி

முதல் நிலை வாழ்க்கைத்திறன் கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நேற்று முதல் எதிர் வரும் 5ஆம் திகதி வரை யா/ கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது

காலை 8 30 மணி தொடக்கம் 4 00 மணி வரை பயிற்சி இடம் பெறும்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
உஷா சினிமா-
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
T. ராஜேந்தரின்
'என்தங்கை கல்யாணி'

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

	(வயது)
★ எயாப்போட் கிளீனேர்ஸ்	21-40
★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்	21-40
★ ஹொட்டல் வெயிற்றர்ஸ்	21-40
★ லேபரர்ஸ்	21-40

★ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)

தமிழ் முஸ்லிம் இருபாலாரும் 30-3-1988க்குள் 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17இலிருந்து 45வரை

சம்பளம் K.T. 30 டினுர்.
2 மணித்தியாலம் மேலதிக வேலை
3 வருட ஒப்பந்தம்
(சாப்பாடு தங்குமிடம், வைத்தியவசதி எல்லாம் இலவசம்.)

★ சவூதி அரேபியா

எயாப் போட் கிளீனேர்ஸ்.

51-பேர் உடனடியாகத் தேவை குறைந்த கட்டணம். கட்டுப்பணம் 7500/- ஒப்பந்தங்கள் 6 மாதங்கள் சம்பளம் 450 SR யுனைற்றட் வழங்கும் மற்றுமொரு துரித சேவை. 3 தொடக்கம் 5 நாட்களுக்குள் குறைந்த செலவில் சிறந்த கொம்பியூட்டர் முறையில் கலர் பிலிப்ஸ் சுருள்களை கழுவியும் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

யுனைற்றட்
இன்ரநஷனல் ஏஜன்சி
666, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)

உணவு விடுதிகளுக்கும்
குளிர்பானச்சாலைகளுக்கும்
விசேட விலையில் **P. V. C.** கொள்கலன்களில்
விநியோகிக்கப்படும்.

● வர்த்தக விசாரணைகளுக்கும் பேலதிக விபரங்களுக்கும்

ஜோ எகட்டன்

[விற்பனைப்பகுதி]
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

★ தாகத்தை தீர்க்கும் தனி ஒரு நபருக்கும் ஏற்றதென தருகின்றோம்.

★ சென் பீற்றர்ஸ் நெல்லி கிரஷ்

இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

★ இப்பொழுது உங்கள் அபிமான நெல்லிரசம் பெயர் மாற்றத்துடன் வருகின்றது அதே! சுவை தரம் தராதரம் அத்துடன் ஒருபடி முன்னேற்றம்.

தோலகட்டி விநியோகஸ்தர்
ஜோ. எகட்டன் தரும்

★ சென் பீற்றர்ஸ் நெல்லி கிரஷ் ★

பெயர் மட்டுமே மாற்றமே தவிர மற்றெல்லாம் அதே தரம்! இவ் இளவேனிற் காலத்தில சென் பீற்றர்ஸ் நெல்லிகிரஷ் உங்கள் தணியாத தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும் என்றும நம்பிக்கையான பொருட்களை வழங்கி வரும் ஜோ. எகட்டனின் விநியோகத்தில் சென் பீற்றர்ஸ் நெல்லி கிரஷ் உங்களை நிச்சயம் தாக சாந்தி செய்யும்.

விலை 600M. L போத்தல் 29/75 சதம் மட்டுமே
யாழ் நகரில் ஏக கையிருப்பாளரும்
★ மொத்த சில்லறை விற்பனையாளரும் ★
ஏ. சுப்பையா & Co
4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(மதுபான விற்பனை நிலையம்)

★★★ உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாரீர் ★★★

[2369]

யாழ். மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தவறவிடாதீர்கள்

புது வருட மலிவு விற்பனை

(2 . 04 . 88 - 11 . 04 . 88) வரை
SKIRTS, BLOUSES,
FROCKS BABY SUITS & BABY FROCKS
மற்றும் நவீன ரெடிமெட் ஆடைகள்
Fashion Garments
227 Navalar Road,
Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)
(2358)

SCIENCE CENTRE

KARAVEDDY
புதிய வகுப்புகள்

G C E (O/L) 87 Dec பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு

G. C. E (O/L) 88 இல பரீட்சைக்கு தோற்றுவதற்கும் G. C. E (A/L) 90 Aug [illegible] ஏற்றமுறை [illegible]

ஆரம்பம் 5-4-1988 பி. ப. 3 மணி
(விஞ்ஞான பாடங்கள் மட்டும்)
(2246)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்



திருமதி பதுமநிதி இராசரெத்தினம்

பிறப்பு: 1-5-1910 இறப்பு: 10-3-1988

ஓய்வுபெற்ற ஸ்ரேசன் மாஸ்டர் அமரர் நாகமுத்து இராசரெத்தினத்தின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி (திருமதி) சி. புஷ்பவதி, வைத்திய கலாநிதி (திருமதி) த. செல்வநாயகி, வைத்திய கலாநிதி இராஜகோபால் இராசரெத்தினம், வைத்திய கலாநிதி பாலகிருஷ்ணன் இராசரெத்தினம், வைத்திய கலாநிதி கிருஷ்ணரெட்னம் இராசரெத்தினம், திருமதி அ. சிவகாமசுந்தரி, இளைப்பாறிய ஆசிரியை. திருமதி சி. மனோரஞ்சிதம், திரு. ரெங்கநாதன் இராசரெத்தினம், திருமதி. செ கிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தாயும், இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதிபதி, ஐ. சிவானந்தன், வைத்திய கலாநிதி இ. தவசோதி, திருமதி. இ. பாலேஸ்வரி, பல்வைத்திய கலாநிதி திருமதி பா. சுசீலா, திருமதி கி சோமாவதி, திரு ஆ. க. அண்ணாமலை (நவ சமசமாஜக் கட்சி அரசியற் குழு உறுப்பினர்), வைத்திய கலாநிதி க. சிறீகாந்தா, பேராசிரியர் கலாநிதி செ. செல்வலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரது அந்தியேட்டி கிரியைகள் 8-4-88ல் கீரிமலையில் நடைபெறும். வீட்டுக் கிருத்தியம் 9 4 88 சனிக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மக்களும், மருமக்களும்.

36, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

★ கிழக்கில் ஸ்ரீலங்காப் படையா?

திருமலைத் தமிழர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வேண்டும்

திருகோணமலை பட்டதாரி மாணவர் சங்கம் அறிக்கை

கிழக்கில் ஸ்ரீலங்காப் படைகளை அமர்த்தும் முடிவு மாற்றி அமைக்கப்படவேண்டும். திருகோணமலையில் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக திருகோணமலை பட்டதாரி மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அறிக்கையின் விபரம் வருமாறு:

இந்திய அமைதிப் படை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிகொண்டிருக்கின்ற நிலையில் வடக்கு-கிழக்கில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் முகாம்களில் மட்டும் தங்கியிருக்க வேண்டுமென்று இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது

எனினும் கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா அரசின் படைகள் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து மிகுந்த கவலையடைகிறோம்.

அத்தோடு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு நலன்களுக்கு முரணாக அமைந்துள்ள இந்த நடவடிக்கைக்கு எமது ஆட்சேபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

1948 ஆம் ஆண்டில் இருந்து திருகோணமலையிலுள்ள தமிழ்ப்பிரதேசங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் அதன் பின்னணியில் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலைகளும் எம்மால் இலகுவில் மறந்துவிட முடியாத வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

ஒப்பந்தத்தின் பின்னரும்

87 ஜூலை ஒப்பந்தத்தின் பின்னர் கூட ஸ்ரீலங்கா அரசானது திருகோணமலைப் பிரதேசத்தில் இரகசியமான முறையில் பல சிங்களக் குடியேற்றங்களை நிறுவியுள்ளதற்கு சான்றுகள் உள்ளன.

அண்மையில் திருகோணமலையிலும் திருகோணமலை அநுராதபுரத்தின் எல்லைப்புறத்திலும் சிங்கள தமிழ் அப்பாவிப் பொது மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளைக் காரணமாக வைத்துக் கொண்டு அக்கொலைகளை நிகழ்த்தியவர்கள் யார் என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஸ்ரீலங்கா அரசானது திருமலையில் தனது இராணுவத்தை சேவையில் ஈடுபடுத்த முயல்கின்றது.

எந்த இன மக்களும் படுகொலை செய்யப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆனால் திருகோணமலையிலுள்ள இந்திய அமைதிப் படையினர் மூலம் இக்கொலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்காமல் தனது படைகளை வெளியே கொண்டுவர முயற்சிக்கிறது ஸ்ரீலங்கா அரசு.

தந்திரம்

எனவே இந்த நடவடிக்கையானது திருகோணமலையில் சிங்களக்குடியேற்றங்களை நிலைப்படுத்தவும், புதிய குடியேற்றங்களை நிறுவவும் ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் தந்திரோபாயம் என்றே நாம் கருதுகின்றோம்.

அதுமட்டுமல்லாமல் யாழ் திருமலை பஸ் பயணிகள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலையானது வடக்கு கிழக்கு இணைப்பைத் துண்டித்து கிழக்கு மாகாணத்தை தனிமைப்படுத்தும் நடவடிக்கையாகும்.

அத்தோடு இச்செயற்பாடானது இந்திய-லங்கை ஒப்பந்தத்தைச் செயலிழக்கச் செய்வதோடு எதிர் காலத்தில் இப்பிராந்தியத்தைச் சீர்குலைக்க முனையும் சக்திகளுக்குத் சாதகமாகவும் அமைய வாய்ப்புண்டு

சிங்களவர்களைப் பாதுகாக்க ஸ்ரீலங்கா படைகளும் தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அமைதிப் படையினரும் என்றொரு உளரீதியான தோற்றப்பாட்டினை இச் செயற்பாடானது உருவாக்கி இருக்கிறது

தமிழர் நலன்களைப் பாதுகாப்பதாக கூறிக் கொள்ளும் இந்திய அரசானது இது விடயத்தில் தமிழர் அமைப்புக்களின் ஆலோசனை எதுவுமின்றி ஸ்ரீலங்கா அரசின் ஒருதலைப்பட்சமான கோரிக்கைக்கு உடன்பட்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்

திருகோணமலையில் தமிழர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வகையில் மேற்படி முடிவை மாற்றியமைக்க வேண்டும். எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

தி. மு. க. வை ஒழித்தால்தான் எம். ஜி. ஆர். ஆத்மா சாந்தி அடையும்: - திருநாவுக்கரசு

பெருந்துறை, ஏப் 2 தி. மு. க. வை தமிழ் நாட்டில் இருந்து ஒழித்தால் தான் மறைந்த முதல்வர் எம். ஜி ஆர் ஆத்மா சாந்தி அடையும் என்று முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு பேசினார்:

கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு பேசியதாவது:

எம். ஜி. ஆர். மறைந்த பிறகு இந்த ஆட்சி 1989 வரை தொடர வேண்டும் என்றேன் அது வரைக்கும் அ. தி. மு. க ஒன்றாக இருக்கவேண்டும் என்று சொன்னேன். ஆனால் எம் ஜி ஆர். உடல் ராஜாஜி மண்டபத்தில் இருக்கும் போது ஆர். எம் வீ மற்றும் சட்டசபை உறுப்பினர்கள் எஸ். ராமச்சந்திரனிடம் தலைவர் இறந்து விட்டார். அடுத்த முதல்வராக யார் வருவது என்றார்கள் நான் அவர் உடல் அடக்கம் செய்யவில்லை அவர் உடல் இருக்கும் போது யார் முதல்வர் என்று கேட்பது முறையல்ல என்று சொன்னேன்.

அண்ணா கருணாநிதி போன்றவர்கள் 40, 45 ஆண்டுகளாக இருந்த போது இரண்டாவது இடத்தில் நெடுஞ்செழியன் இருந்தார். அவர் தலைமையில் அமைச்சரவை 6 மாதமாவது தொடரலாம் என்று கூறிவிட்டு ஜெயலலிதாவை சந்தித்து நெடுஞ்செழியன் முதல்வராக இருக்கட்டும் என்று அவரிடத்தில் சொன்னேன். அதற்கு ஜெயலலிதா எனக்கு அமைச்சர் பதவி. முதல்வர் பதவி எல்லாம் வேண்டாம் என்று சொன்னார். ப. உ. ச, முத்துசாமி, ஆர். எம் வீ இடத்தில் நானும் எஸ். ராமச்சந்திரனும், அரங்கநாயகமும் சொன்னோம். ஒப்புக்கொண்டனர். சில நாள் கழித்து ஆர் எம். வீ. ஆதரவு எம். எல் ஏ. க்களை அழைத்து கையெழுத்து வாங்கி விட்டோம் ஜானகி தான் முதல்வர் என்று கூறிவிட்டார். எம் ஜி ஆர் தன்னுடைய பதவியை அரசியலில் வாக்கூடாது என்று நினைத்து அறிக்கைகள் எல்லாம் விட்டார்

தேர்தல் எப்போது வந்தாலும் இ. காங்கிரஸ் உடன் கூட்டணி உண்டு. இந்த கூட்டணி எம் ஜி. ஆர் ஏற்படுத்தியது. எம் ஜி ஆர். நோய்வாய்ப்பட்ட போது, இந்திராகாந்தி தனி விமானம் கொடுத்து அமெரிக்காவிற்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்தார். அவர் மகன் ராஜீவ்காந்தி நண்பராக இருந்து வந்துள்ளார்.

1972 ல் தொடங்கிய தர்மயுத்தம் தி. மு. க. கட்சியை தமிழகத்தில் இருந்து ஒழித்தால்தான் முடியும். அப்போது தான் அவர் ஆத்மா சாந்தியடையும்.

எம் ஜி. ஆர். நின்றால் பொதுக் கூட்டம், நடந்தால் ஊர் வலம், அது இன்று ஜெயலலிதாவிற்கு இது வரை நடந்த பொதுக்கூட்டங்கள் எல்லாம் மாநாடு போல் உள்ளது. மாநாடு நடத்த வேண்டும் என்றால் இடமே இல்லை.

ஜானகி அம்மாள் எங்களுக்கு எதிரி இல்லை. முத்துசாமி அடுத்த தேர்தலில் ஈரோட்டில் நிற்பார் என்பது சந்தேகம். தொகுதியை தேடிக் கொண்டிருக்கிறார் 1984 தேர்தலில் எம் ஜி ஆர் ஆண்டிப்பட்டியி போட்டியிட்டார் கருணாநிதி போட்டியிடாமல் எம். எல். சி. ஆனார். அதையும் எம். ஜி ஆர் கலைத்து விட்டார் தி மு க. கட்சியை அழிப்பது நமது குறிக்கோள். தொண்டர்கள் ஆதரவாளர்கள் தான் தேர்தலில் வெற்றி பெறமுடியும், வேட்பாளர் யார் என்று பார்க்காமல் ஜெயலலிதா ஆட்சி அமைக்க ஆதரவு தர வேண்டும் நமது சின்னம் தான் இரட்டை இலை.

இவ்வாறு திருநாவுக்கரசு பேசினார் (உ)

இரட்டை இலைச் சின்னம்;

ஜெயலலிதா அணிக்குக் கிடைக்காது என்கிறார் பாண்டியன்

புதுடில்லி ஏப் 2 'இரட்டை இலை' சின்னமாகக் கிடைக்கும் அ தி மு.க வில் தான் நான் இருப்பேன்.

தமிழ்நாடு சபாநாயகர் பி எச். பாண்டியன் முன்கண்டவாறு சொன்னார்.

ஜெயலலிதா அணிக்கு 'இரட்டை இலைச்' சின்னம் கிடைத்தால் அதில் இருப்பீர்களா? இப்படிச் செய்தியாளர் திரு. பாண்டியனைக் கேட்டார்.

திரு. பாண்டியன் பதில்: ''ஒருக்காலும் ஜெயலலிதா அணிக்கு இரட்டை இலைச் சின்னம் கிடைக்காது'' ''தமிழ்நாடு சட்ட சபை கலைக்கப்பட்டிருந்தாலும், எனது கவனத்துக்குக் கொண்டுவரும் விஷயங்கள் குறித்து அரசாங்கத்திடம் என்னால் கேள்வி கேட்க முடியும்'' இப்படி திரு பாண்டியன் மேலும் சொன்னார்.

ஜே ஆர். பதவிக் காலம்:

அறுவர் கமிட்டி ஆராயப் போகின்றது!

கொழும்பு, ஏப் 3 திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன மூன்றாவது பதவிக் காலத்துக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வகை செய்ய அரசமைப்புச் சட்டத்தை திருத்துவது பற்றி ஆராயும் அறுவர் கமிட்டியின் தலைவராக திரு. டி எச் என். ஜயபஹா தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஏனைய உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

திரு ஜி வி. புஞ்சி நிலமே, திரு இ பி போல் பெரேரா, ஏ.எப் விஜேமானே, தயா பெல்பொல, ரியூடர் கீர்த்தினந்த.

மூன்றாவது தடவையும் திரு. ஜெயவர்த்தன போட்டியிடவேண்டும் என்ற கோரிக்கையை முன்னாள் பிரதிஅமைச்சர் ஜி. வி புஞ்சி நிலமே கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஐ. தே க செயற்குழுக் கூட்டத்தில் விடுத்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

அரசமைப்புக்கு கொண்டு வருவாராம் அனுரா ஒரு திருத்தம்

கொழும்பு, ஏப்3 அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா அறிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதிக்கு எதிரான அவதூறு வழக்கை கொழும்பு மாவட்ட நீதிபதி நிராகரித்த பின்னர் திரு. அனுரா பண்டாரநாயக்கா முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதி தனது விடுபாட்டு உரிமையை ரத்துச் செய்து விட்டு நீதிமன்றம் வரவிரும்புகின்ற சமயத்தில் அதனை நீதிமன்றம் ஏற்கவேண்டும்.

அதற்கு வழி செய்யக்கூடியதாக நான் கொண்டுவரவுள்ள அரசமைப்புச் சட்டத் திருத்தம் அமையும்.

நாடாளுமன்றத்தில் இத் திருத்தத்துக்கு ஆதரவாக யு என். பி. எம்பிக்கள் வாக்களிப்பர் என்று திரு அனுரா பண்டாரநாயக்கா நம்பிக்கை தெரிவித்தார்

அரசமைப்புச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் புதிய வழக்கு ஒன்றை ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன் என்றும் அவர் சொன்னார் (அ-எ)

ரம்புக்கணை புதிய எம். பி.

கொழும்பு, ஏப்ரல் 3 ரம்புக்கணை எம். பியாக திருமதி சமந்தா கருணாரத்ன நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சிச் செயற்குழு கடந்த புதன் கிழமை இந்த நியமனத்தைச் செய்தது

அண்மையில் காலமான அமைச்சர் அசோகா கருணாரத்தினவின் மூத்த புதல்வியான இவர், தந்தைக்கு அந்தரங்கச் செயலாளராகவும் பணியாற்றிவந்தார். [ஒ-எ]

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா:

உடனடி வேலை வாய்ப்புகள்

1.	ஓட்டோ மெக்கானிக்	700 — 800	SR
2	கனரக வாகன சாரதிகள்	— 550 — 700	SR
3.	லுப்பி (B றிகேஷன் வல்லுநர்	— 700 — 800	SR
4.	கனரக ஈகுனிப்மன்ட் மெக்கானிக்	— 700 = 800	SR
5.	மோட்டார் மின்சுருள் சுற்றும் வல்லுநர்	— 700 — 800	SR
6.	ஓட்டோ ஏ/சி வல்லுநர்	— 800 — 900	SR
7.	வீல் பலன்ஸ் ஏலாயன் வல்லுநர்	— 800 — 900	SR
8.	பொடி திருத்தும் வல்லுநர் (ரிங்கர்)	— 700 — 900	SR
9	பெயின்டர்ஸ்	— 550 — 700	SR
10.	அப்கோல்ஸ்டரி/கண்ணடி வல்லுநர் வாகன முகடு செய்யுநர்)	— 600 — 850	SR
11	டியூன் அப் வல்லுநர் (காபறேட்டர்)	— 700 — 800	SR
12	இலிகிதர்	— 500 — 700	SR
13	குழாய் பொருத்துநர்	— 500 — 700	SR
14	Welder	— 550 — 700	SR
15	லேத் மெஷின் டெக்னீசியன்	— 600 — 750	SR
16	தச்சன்மார்	— 600 — 750	SR
17	மேசன்மார்	— 600 — 750	SR
18	இயந்திரவியல் என்ஜினியர்	— 1800 — 2250	SR
19	இலத்திரனியல் என்ஜினியர்	— 2000 — 2500	SR
20.	மின்பட வரைஞர்	— 1000 — 1500	SR
21.	மின்னியலாளர்	— 600 — 800	SR
22.	A/C தொழில்நுட்பவியலாளர்	— 750 — 900	SR
23.	காரியதரிசி/தட்டெழுத்தாளர்	— 700 — 850	SR
24.	டெலெக்ஸ் ஒப்பரேற்றர்ஸ்	— 650 — 800	SR
25	கிளீனேர்ஸ்	— 350 + 100	
26.	ALUMINIUM LUBRICATORS	— 3	இடங்கள்
27	WELDER	— 3	இடங்கள்
28	CASHIER (Super Market)	— 5	இடங்கள்
29	SECURITY OFFICERS (Super Market)	— 5	இடங்கள்

தகுதியுடையோர் உடன் நேரில் வரவும்

எம்மிடம் இதற்கு முதல் தொடர்பு கொண்ட அனைவரும் உடனடியாக நேரில் வந்து சந்திக்கவும்.

K. LINGAM
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

A. தவச்செல்வம்
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

முக்கிய அறிவித்தல்

எம்மால் உற்பத்தி செய்யப்படும் Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பிறோயிலர் குஞ்சுகள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விநியோகம் செய்ய 19, முருகேசர் ஒழுங்கையில் இருக்கும் நல்லூர் பாம் சென்டருக்கு (Nallur Farm-Centre) மட்டுமே உரிமையுண்டு.

வேறு யாரிடமும் Lohmann குஞ்சுகளை நீங்கள் வேண்டினால் அதன் தரத்திற்கு நாங்கள் பொறுப்பில்லை.

"பிறிமா" "PRIMA"
Ceylon Grain Elevators Ltd,
15, Rock House Lane,
COLOMBO - 15 (2359)

ஓர் அரிய சந்தர்ப்பம்!

தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல்

முற்றிலும் இலவசம்!

- ✶ கலர் பிரதி ஒன்றுக்கு ரூபா 4/75 மட்டுமே
- ✶ கொழும்பில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுகிறது. மிகத் தரமானது.
- ✶ 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்.
- ✶ ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்பு:

SHABRA

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

தொழில் வசதி

✶ சவூதி அரேபியா
(Saudi Arabia)

✶ சர்வகலாசாலை (UniverSity)

● வைத்தியசாலை (Hospital)

1 பூச்சி கட்டுப்பாட்டுப் போதனையாளர் (Pest Control Advisors)

2. பூச்சி கட்டுப்பாட்டாளர் (Pest Controller)

3. பூச்சி கட்டுப்பாட்டு வேலையாள் (Pest Control Labour)

4. வேலை மேற்பார்வையாளர் (Labour Supervisors)
5. வேலையாள் (Labourer)
6. கூலியாட்கள் (Porters)
} பொது வேலை

★ உணவு பரிசாரக கிளீனேர்ஸ் (Catering Cleaners)

விவசாய - மலேரியா பகுதியில் தற்போது வேலை செய்பவர்க்கு அரிய சந்தர்ப்பம்

வீட்டுப்பணி, பெண்கள் (House Maid)

டுபாய் - குவையிற் - சவூதி
வயது 18க்கு மேல் 30 வயதுக்கு மேற்பட்டோர்

உங்கள் மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

I. Indranathan

'M' Three Travels

College Road. Sothy Lane, Kankesanturai
(Bus Route 769) (2273)

இறை அருள் ஒன்றே எம்மை வழி நடத்தும்

கொடிகாமம், ஏப்3

சோதனையும் வேதனையும் மிக்க இக்காலகட்டத்தில் இறையருள் ஒன்றே எம்மை வழி நடத்துகின்றது.

செருக்கல் பதி விநாயகர் ஆலயத்தில் சங்காபிஷேகமும் தொடர்ந்து 10 நாட்கள் (1008) வில்வ அர்ச்சனையும் நடைபெற்றன.

நிறைவு விழாவில் சாவகச்சேரி நீதிவான் புலவர் திரு. மு. திருநாவுக்கரசு ஆசியுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சிவ ஸ்ரீ ஜெகதீஸவரக் குருக்கள் தலைமையில் விழா நடைபெற்றது.

(இ-75)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

வெற்றுச்சாக்கு

கேள்விப்பத்திரம்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தில் 2947 சாக்குகளுக்கு [வெற்று] கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விகளை 8-4-88ந் திகதி பகல் 12-00க்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ ''பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். விண்ணப்பதாரர் வைப்புப் பணமாக ரூ. 250/- செலுத்தியிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை 6-4-88ந் திகதிக்குள் பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்

31-3-88
ஊர்காவற்றுறை.

178 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணின் மடியில்
22- 10- 1960

அண்ணல் அடியில்
13- 10- 1987

கு. கமலதாஸ்

எமது அருமைச் செல்வமே! கமலதாஸ்- உனது ஆத்மா சாந்தி அடைவதாக. இறைவனை பிராத்திக்கின்றோம்.

உதயன் பத்திரிகாலயத்தில் சுடர் விட்டு இலங்கி 13. 10. 87 இல் அகால மரணம் அடைந்த எமது குடும்ப ஒளிச்சுடரின் அந்தியேட்டி கிரியைகள் வில்லூன்றியில் 7. 4. 88 வியாழக்கிழமை காலையில் நடைபெறும். அன்பர்களையும் ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை தாயர், சகோதரர்,
மைத்துனர், மைத்துனிகள், உறவினர்.

அந்தியேட்டி அழைப்பிதழ்

அருள்மணி (வதனி) சச்சிதானந்தம்

தோற்றம் : 16 - 11 - 1959
மறைவு : 06 - 03 - 1988

எனது மனைவி
அருள்மணி (வதனி) சச்சிதானந்தம்
அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் நாளை திங்களன்று 4-4-88 நுணாவிலில் நடைபெறவிருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(2288)

தகவல் :
அ. சச்சிதானந்தம்
க. பரமசாமி

சுயநலப் போக்கே இன்றையகஷ்டங்களுக்கு

காரணம் என்கிறார் சுவாமிஜி

பருத்தித்துறை, ஏப் 3

''இன்றைய மக்கள் சமய போதனைகளையும் ஆத்மீக வழிகளையும் மறந்து ஆடம்பரமாகவும், சுயநலப் போக்குள்ளவர்களாகவும் வாழ முற்படுவதாலேயே இன்று அவர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது''

துன்னாலை அல்லையம்பதி கிராமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண சமய பாடசாலையைத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறைஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சீத்ருபானந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'மாணவர்களுக்கு சிறு வயதிலேயே சமயக்கல்வியைப் போதிப்பது எதிர் காலத்தில் அவர்கள் சிறந்த பிரஜைகளாகுவதற்கு வழி வகுக்கும். அந்த வகையிலே ஸ்ரீமுருகன் சன சமூக நிலையத்தினரின் முயற்சி வரவேற்கப்படுவதுடன் பாராட்டப்பட வேண்டியதுமாகும். வடமராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் முதலாவது சமய பாடசாலை இதுவாகும்' என்றார்.

ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தின் தலைவரான திரு. ச. செந்துராசா பேசுகையில் 'மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உதவுவதன் மூலம் ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்த, ஜீவசேவையே சிவபூசை என்ற தத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்' என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சமயப்பாடசாலை ஆலோசகர் திரு. தி. தா. சண்முகநாதன் நன்றியுரை கூறினார். (அ-118)

இளைஞர் மரணம்

அம்பாறை, ஏப் 3

இயக்கம் ஒன்றின் உறுப்பினர்களைத் தேடி நிந்த ஊரிலுள்ள வீடியோ கொட்டகைகளில் தேடுதல் நடத்திய மாற்று இயக்கம் ஒன்றின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் மரணமானார்.

நிந்தவூர் 5ஆம் குறிச்சியைச் சேர்ந்த சேகர் என்பவரே அந்த இளைஞராவார்.

(ஒ 14)

மக்கள் முகம்

ஈச்சமோட்டை சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், ஏப். 3

ஈச்சமோட்டை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் சமாதான நீதிவான் திரு. ஜே. ஈ. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவாகினர்.

தலைவர்: கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம், உபதலைவர் திரு. ஆ. கனகசபை, செயலாளர் திரு. எம். சுந்தரலிங்கம் உபசெயலாளர் திரு என். ஜெனகன், பொருளாளர் திரு. எஸ். தவசீலன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். சிவராசரெத்தினம், எஸ் ஏ. பீற்றர், என். மகேந்திரன, கே. இந்திரமோகன், ரி. அஜந்குமார், திருமதி. தங்கமணி பாக்கியநாதர், திருமதி, நீற்றுவேதநாயகம்.

கணக்குப் பரிசோதகர் திரு ரி. பாலசுந்தரம், நிலையப் பாதுகாவலர்: திரு. எஸ். திசோகரன், விளையாட்டுத்துறைப் பொறுப்பபாளர் திரு. இராசா குணசிங்கம்.

(இ க)

சமட்ரக் ரவல்ஸ்

★ இலவசம்
பிரயாண ஒழுங்குகள்
✶ சிங்கப்பூர்
✶ குவைற்
✶ கொங்கொங்

1. வீட்டுப் பணிப்பெண்கள்
2. வீட்டு உதவியாளர்கள் [பெண்கள்]

வயதெல்லை. 20—40 வரை

பிரயாண ஒழுங்குகள் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றன.

நேர்முகப் பரீட்சைகள் கீழ்க்காணும் முகவரியில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிரயாணச் செலவுகள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

பாஸ்போட்டுடனும், 10 பாஸ்போட் அளவு புகைப்படங்களுடனும், 2 முழு கலர் படங்களுடனும் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்க.

குறிப்பு: பாஸ்போட் இல்லாதோர் உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட் செய்து கொடுக்கப்படும்.

முகவரி: சமட்ரக் ரவல்ஸ்
262, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கடமையே கண்ணாயிருந்த கமலதாஸ். .

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதின்மூன்றும் திகதியன்று உருப்பிராயில் வைத்து அந்த இளைஞனைக் காலன் அணைத்துக் கொண்டான். காலன் எருமைக் கடாவிலோ அல்லது ஹெலிக்கொப்டரிலோ வரவில்லை. ஷெல்வடிவில் வந்தான்.

இந்த ஷெல் எமன், கடந்த வருட இறுதியில் எத்தனையோ தமிழரின் உயிருக்கு உலை வைத்தது ஒருசரித்திரமாகிவிட்டது ஈழத்தமிழர் வரலாற்றின் கறுப்புஅத்தியாயங்களில் அதுவும் மறக்கமுடியாத, மறைக்க முடியாத ஒன்று.

கமலதாஸ், நயினாதீவு இரண்டாம் வட்டாரத்தில் 22- 12- 1960 இல் பிறந்தவர் தனதுமாணவப் பருவத்தில் நயினாதீவு மகா வித்தியாலயத்தில் சேர்ந்து கல்வியைப் பெற்றார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்து தொடர்ந்து கல்வி பயின்று பல சாதனைகளைப் புரிந்தார். விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வம் காட்டினார்.

சாரணர் இயக்கத்தில் சேர்ந்து பிறருக்கும் உதவும் பண்பைச் சம்பாதித்தார்.

எப்போதும் அன்றலர்ந்த செந்தாமரை போல் சிரித்த முகத்துடன் காணப்படும் அவர் சுடுசொற் தாங்காதசுபாபம் உள்ளவர். அமையும் அடக்கமும், பணிவுமே தனது வாழ்க்கையாக அமைத்துக் கொண்டவர் கமலதாஸ்,

பாடசாலை வாழ்க்கையை முடித்துக் கொண்ட கமலதாஸ், கிளிநொச்சியில் உள்ள சர்வோதய விவசாயப் பண்ணையில் தமது பணியைத் தொடங்கினார். அங்கு சுமார் ஒன்றரை வருட காலமாக பொறுப்பான பதவிகளை வகித்தார்.

உதயன் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கமலதாஸ் பத்திரிகை விநியோகப் பகுதியில் பொறுப்பான பதவியில் பணிபுரிந்தார். பத்திரிகையை நேரத்தோடு விநியோகிக்க வேண்டும் என்பதிலும், விநியோகஸ்தரின் குறைகளைத் தீர்த்து நல்லுறவு வைத்திருக்க வேண்டும் என்பதிலும் கருத்தாக இருந்தவர் திரு. கமலதாஸ். கடமை கண்ணானது என்ற நல்ல இலட்சியத்துடன் பணிபுரிந்து பலரது மதிப்பையும் பெற்றவர்.

அவரது இழப்பு குடும்பத்தாருக்கு மட்டுமன்றி உதயன் நிறுவனத்துக்கும் ஏற்பட்ட ஒன்றாகக் கருதுமளவுக்குநிறுவனத்துடன் ஒன்றித்து உழைத்தவர் கடமையே கண்ணாக இருந்த கமலதாஸை இனி எங்கு காண்போம்?

—சக ஊழியர்

உடனடியாக வேலை வாய்ப்புகள்

★ SAUDI ARABIA
✶ 100 CLEANERS 300 S.R

100 பேர் உடனடியாகத் தேவை.
சாப்பாடு, தங்கும் இடம் இலவசம்
(10 நாட்களுக்குள் பிரயாணம் மேற்கொள்ளலாம்.)
வயது 21 தொடக்கம் 49 வரை
பாஸ்போட், 3 படம் மட்டும் தேவை.

★ KUWAIT
✶ CLEANERS 30 K.D

மற்றும் சிங்கப்பூர், Kuwait, Abudhabi ஆகிய நாட்டிற்கு House Maid தேவை.
கலர் படம் மற்றும் 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

T. V. Travels & Tourist
Brown Road KOKUVIL
(Kokuvil Railway Station Front)

விளையாட்டரங்கு

கிளிநொச்சி மாவட்டம்

உடற் பயிற்சிப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஏப் 3

கிளிநொச்சி மாவட்ட வருடாந்த உடற்பயிற்சிப் போட்டியில் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம் இரண்டு முதல் இடங்களைப் பெற்றுக் கொண்டது.

பரந்தன் இந்து மகா வித்தியாலயவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இம்மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. கே.கே. சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி, முரசுமோட்டை, உருத்திரபுரம், அக்கராயன், கிளிநொச்சி,பூநகரி,பளை ஆகிய ஏழு கொத்தணி அமைப்புகளின் கீழ்உள்ள பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றின

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஆறு குழுக்கள் பங்குபற்றின இதில் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம் முதலிடத்தைத் தட்டிக் கொண்டது.

19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் எட்டுக் குழுக்கள் பங்குபற்றின. இதில் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றது.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எட்டுக் குழுக்கள் பங்குபற்றின. இதில் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம் முதலிடத்தைத் தனதாக்கியது.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் ஏழு குழுக்கள் பங்குபற்றிய தில வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் முதலிடத்தைப்பெற்றுக் கொண்டது.

[இ-க-76]

அஸ்மா வைத்தியம்

நீண்டநாள் தும்மல், இருமல், சளி உள்ளவர்கள் நாளடைவில் அஸ்மா நோயாளியாவதைத் தடுத்துக்கொள்ளுங்கள்.

அஸ்மா (தொய்வு முட்டு) உள்ள புதிய நோயாளர்கள் தற்சமயம் பதிவு செய்ய வேண்டியதில்லை ஆனல் பார்வை நேரம் தவறி வருபவர்கள் கண்டிப்பாகப் பார்வையிடப்படமாட்டார்கள்.

பார்வை நேரங்கள்
(வியாழன் தவிர ஏனைய நாட்களில்)
காலை 9 மணி முதல் 12 மணி வரை
மாலை 4 மணி முதல் 6மணி வரை

டாக்டர் சுருஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
33, நாலாம் குறுக்குத் தெரு,
(சப்பல் வீதியருகில்)
யாழ்ப்பாணம்.

மீண்டும்
எமது சேவை
Printo
Style System

முறையில் எமது போட்டோ கொப்பி சேவை ஆரம்பமாகி உள்ளது.

அலுவலகங்கள், பாடசாலை மாணவர்கள் நன்மை கருதி ஏப்பிரல் 4ஆம்திகதி தொடக்கம் காலை 7 மணி முதல் மாலை 6மணி வரை சேவை இடம் பெறும்.

குறிப்பு: அதிக கொப்பிகள் எடுப்பவர்களுக்கு அதிவிசேஷ கழிவுகள் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:
சண்முகம் றேட்ஸ்
(185) 65, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.
(2363)

உதயசங்கற்பம்

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அதனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.

— பைபிள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:-898/8 நாவலர் வீதி, தொலைபேசி 24806
யாழ்ப்பாணம். 22078
13 04 1988 த.பெ.இல:-88

எம். பிக்கள் சம்பளம்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளம் பத்தாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இந்தப் பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு [illegible] எனவும் கூறப்படுகிறது.

[illegible] கொழுத்த சம்பள[illegible] பொருளாதார நிலை இடம் [illegible] என்பது தான் பிரதான கேள்வி.

மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தான் தாம் அரசியலில் ஈடுபடுவதாக அரசியல்வாதிகள் எப்போதும் ஆரம்பத்தில் கூறுவது உண்டு. கடைசி வரை அப்படியே காட்டிக் கொள்வதும் உண்டு.

ஆனால் இலங்கையில் மட்டுமன்றி ஏனைய பல நாடுகளிலும் மக்கள் சேவை சரிவர நடக்காமல், அரசியல் வாதிகளின் சுயசேவையும், சுய உயர்ச்சியும், குடும்ப உறவினர் சேவையும் தான் முன்னுரிமை பெறுவது நடைமுறை.

மக்கள் பிரதிநிதிகள் மதிப்புக்கு உரியவர்கள் என்பதால் அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்ப நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. நியாயமான சம்பளம் வழங்கப்பட்டால் வேறு வழிகளில் பணம் தேட வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு உண்டாவது குறைந்துவிடும்என்று சிலர்வாதம் செய்யலாம்.

ஆனால் அவற்றைக் கருதி அளவுக்கு அதிகமாகச் சம்பளம் வழங்குவது ஒருபோதும் ஏற்கமுடியாதது. மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் செலுத்தும் வரிப்பணம் அவசியமான எத்தனையோ சேவைகளுக்குச் செலவிடப் பட வேண்டியது.

மக்கள் சேவை செய்ய வந்தவர்களுக்கே கொழுத்த சம்பளம் கொடுத்து வரிப் பணத்தைக் கரைத்தால் பொதுமக்களின் தேவைகளை எப்படி நிறைவேற்றுவது? பொதுமக்கள் நலனுக்குப் பயன்படுத்தப்படும் பணத்தைக் குறைப்பதைத் தவிர வேறு வழி, அல்லது நிதி வளம் இருக்குமா?

எம். பிக்களுக்கு கொழுத்த சம்பளம் என்பது மக்கள் நலனில் கைவைப்பதாகும். மக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்கள் அவர்கள் வயிற்றில் அடிப்பதாகும்.

எம்.பிமாருக்கு மாதச் சம்பளத் தவிட பலவித அலவன்ஸுகளும் வழங்கப்படுகின்றன எல்லாவற்றையும் கூட்டிப் பார்க்கும்போது மக்கள் வரிப்பணத்தில் குறிப்பிட்ட பகுதி எம்.பிக்கள் கைக்குப் போய் விடும். இது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை அல்ல.

அளவுக்குஅதிகமாகஎம்.பியின் அந்தஸ்தை உயர்த்துவதாகவும் அது அமையும். மக்களை மதிக்காமல் இருப்பதற்குத் தூண்டுகோலாகவும் அமையலாம்.

உத்தேச சம்பள உயர்வு மிக அதிகமாகும். அது நியாயமானதாக ஆக்கப்படவேண்டும் எதிலும் ஒரு நிதானம் அவசியம். அந்த நிதானம் எம்.பிக்கள் சம்பள விடயத்திலும் நிச்சயம் தேவைப்படுகிறது. மக்கள் வரிப்பணம் என்பதற்காக நிதானமின்றி அதனைச் செலவிடலாம் என அரசாங்கம் நினைத்து விடக் கூடாது.

மக்கள் தங்களைத் தெரிந்து எடுத்து அனுப்பினார்கள் என்பதற்காக மக்கள் நலனைப் பின்தள்ளி தமது சொந்த நலனை முன் வைக்க முயற்சிக்கக் கூடாது. அது பெரும் நம்பிக்கைத் துரோகமாக முடியும்.

சு. க. ஆட்சி வந்தால்

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்படும்

சிறிமா சொல்கிறார்

கொழும்பு, ஏப் 3 சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தவுடன் நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய வரையறையற்ற அதிகாரங்களைக் குறைக்கச் சட்டம் கொண்டுவரும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியாக வருவது என் ஆசை அல்ல. நான் பதவி ஆசை பிடித்து அலையவில்லை. நான் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி நடத்தி விட்டேன்

நாடு நெருக்கடியான நிலையில் உள்ளது. இதைப் பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடியாது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (ஒ-எ)

---

3 மாதங்களில் 500 பேர் பலி

பஞ்சாப் மாநிலத்தில் எந்நேரத்திலும் அவசர காலநிலை பிரகடனமாகலாம்?

புதுடில்லி, ஏப். 2 பஞ்சாப் மாநிலத்தில் எந்த நேரத்திலும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படலாம்.

புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

கடந்த சிலதினங்களில் நூற்றுக்கு மேலான இந்துக்கள் சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவசரகால நிலையைப் பிறப்பிக்கத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகளை புதுடில்லி அரசு எடுத்துள்ளது

பஞ்சாப் மாநிலத்திற்கு மட்டும் தனியாக அவசரகால நிலையைப் பிறப்பிக்க அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 59 ஆவது திருத்தம் வழிசெய்கிறது

இதனிடையில் பஞ்சாபில் பணிபுரியும் பாரத இராணுவத்துருப்புக்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சீக்கியத் தீவிரவாதிகள் தற்போது ரொக்கட்டுகளையும் பாவிக்க ஆரம்பித்துள்ளனர் என்பதால்தான் புதிய ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன.

சீனாவில்இருந்து ஏராளமான கலாஷ்னிகோவ் துப்பாக்கிகளை தீவிரவாதிகள் பெற்றுள்ளனர் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இது வரை 500 க்கு அதிகமானோர் பஞ்சாப்பில் கொல்லப்பட்டனர். (எ)

சோவியத் யூனியன்

ஆர்மெனியாவில் தொடரும் வேலை நிறுத்தம்!

மாஸ்கோ, ஏப் 2 பிரதேசத் தகராறு குறித்து ஆர்மெனியா மாநிலத்தில் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதை சோவியத் வானொலி [illegible] செய்தது

[illegible] 27 [illegible] அஸர்பை[illegible] மாநிலத்துடன் [illegible] பட்ட கரபா[illegible] ஆர்மொனியாவுடன் இணைக்கக் கோரி இவ் வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது.

இன உணர்வுகளுக்கு இடங்கொடுத்து கரபா பகுதியை மீண்டும் ஆர்மொனியாவுடன் சேர்க்க முடியாதென்று சோவியத் தலைமைப் பீடம் கருத்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

60 நாள் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது!

கிளர்ச்சியாளருக்கு

அமெரிக்கா மனிதாபிமான உதவி

மனகுவா, ஏப் 2 நிக்கரகுவாவில் 60 நாள் யுத்தநிறுத்தம் இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

அரசுப் படைகளுக்கும் கொன்றா கிளர்ச்சிப் படைக்கும் இடையே யுத்த நிறுத்த உடன்பாடு அண்மையில் ஏற்பட்டது தெரிந்ததே.

இது வரை இருதரப்பிலும் யுத்தநிறுத்த மீறல் சம்பவம் எதவும் அறிவிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் கொன்றாக் கிளர்ச்சியாளருக்கு மனிதாபிமான உதவிகளை அளிப்பதற்கு தேவையான 4 கோடி 80 லட்சம் டாலர் உதவித் திட்டத்துக்கு அதிபர் றேகன் வாஷிங்டனில் வைத்துக் கைச்சாத்திட்டார்.

அமெரிக்கக் காங்கிரஸ் இத்திட்டத்துக்கு ஏற்கனவே அங்கீகாரமளித்து விட்டது.

உணவு, உடை, உறையுள், மருந்து முதலிய உதவிகளே இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் (எ)

பனமாவுக்கு அமெ. துருப்புக்கள்!

அதிபர் றேகன் உத்தரவு

பனமா, ஏப் 2 பனமாவுக்கு 1,400 அமெரிக்கப் படைவீரர் அனுப்பப்படவிருக்கின்றனர்.

இதற்கான உத்தரவை அதிபர் றேகன் விடுத்திருக்கின்றார்.

பனமாவில் உள்ள அமெரிக்கப் பிரசைகள் மற்றும் அமெரிக்க நலன்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கப் படை அனுப்பப்படுவதாக அதிபர் றேகன் அறிவித்தார்.

போதைவஸ்துக் கடத்தல் குற்றத்துக்கு ஆளான இராணுவத் தளபதி ஜெனரல நொரியாகோவை பதவி விலகக் கோரி பனமாவில் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது.

இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. (எ)

சீக்கியத் தீவிரவாதிகளிடம் சோவியத் ரொக்கட்டுகள்?

சண்டிகார், ஏப். 2 பஞ்சாப்பில் முதன்முறையாகச் சீக்கியத் தீவிரவாதிகள் பாவித்த ரொக்கட்டுக்களில் சோவியத் அடையாளங்கள் காணப்பட்டன என்று இந்திய இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆர் பி ஜி - 7 என்ற சக்தி வாய்ந்த ரொக்கட்டுக்களை எப்படி தீவிரவாதிகளுக்குக் கிடைத்தன என்பது பற்றி பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

பாரிஸ் நகரில் ஆர்ப்பாட்டம்

பாரிஸ், ஏப் 2 தென் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் பிரதிநிதி ஒருவர் பாரிஸ் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

தென் ஆபிரிக்காவின் தூதரகம் மீது குண்டு வீசப்பட்டது.

இதனிடையில், தனக்கும் இக்கொலைக்கும் தொடர்பு கிடையாது என்று தென் ஆபிரிக்க அரசு அறிவித்துள்ளது. (எ)

வெளி உலகில்

ஈரான் மீதான ஏவுகணைத்தாக்குதல் தற்காலிக நிறுத்தம்

ஈராக் அறிவிப்பு

துருக்கிப் பிரதமரின் விஜயம் காரணமாக ஈரான் மீதான ஏவுகணைத் தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக ஈராக் நேற்று அறிவித்தது

நேற்று முன்தினம் இரவு முதல் அமுலுக்கு வர இருந்ததாக அறிவிக்கப்பட்ட இந்தத் தாக்குதல் நிறுத்தம் துருக்கிப் பிரதமர் ஈராக்கில் இருந்து புறப்பட்ட 6 மணித்தியாலங்களின் பின்னர் கைவிடப்படும் என்றும் ஈராக் அறிவித்தது. (ஒ-எ)

திருமதி அக்யூனோவின் முதலாவது சீன விஜயம்!

மணிலா, ஏப்.2 சீனாவுக்கு விஜயம் செய்வது குறித்து பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்யூனோ கருத்து வெளியிட்டார்.

அந்த நன்னாளை ஆவலுடன் எதிர் பார்த்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த மாதத்தில் தனது வெளியுறவு அமைச்சருடன் திருமதி அக்யூனோ சீனாவுக்கு விஜயம் செய்ய இருக்கின்றார். (எ)

சமய சந்நிதிகளில்

சங்காபிஷேக அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.3 சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சர்வ மங்கள ராஜ ராஜேஸ்வரி அம்பிகை தேவஸ்தான சங்காபிஷேக அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்து நாட்களுக்கு திருவிழா நடைபெறும்.

வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் விழா 18 ஆம் திகதி காலை எட்டு மணிக்கு நடைபெறும். (இ-10)

பாலஸ்தாபன அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப் 3 உரும்பராய் கருணாகரப்பிள்ளையாருக்கான பாலஸ்தாபன அபிஷேகம் நாளை திங்கள் பதினொரு மணி அளவில் நடைபெறும்.

பாலஸ்தாபன ஆரம்பக் கிரியைகள் இன்று முற்பகல் இடம்பெறுகின்றன.

பாலஸ்தாபனத்தை அடுத்து ஆலயத்தில் திருத்த வேலைகள் நடைபெற உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது (இ-10)

சீர்காழி நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3 சீர்காழி எஸ். கோவிந்தராஜனின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை நான்கு மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் தலைவர் சங்கீத பூஷணம் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சங்கீத வித்துவான்கள், இசைஅபிமானிகள், அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு இசை வள்ளலின் ஆத்மசாந்திக்கு அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுளளது (இ-10)

குறிப்பிட்ட காலத்தில் ஜனாதிபதி தேர்தல் இல்லை என்றால்

நாடு எந்தப் பாதையில் செல்லும் என்பதைச் சொல்ல முடியாது

சிறிமா எச்சரிக்கை

கொழும்பு, ஏப் 3 குறிக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் நடத்தப்படாவிட்டால் நாடு எந்தப் பாதையில் செல்லும் என்பதைச் சொல்ல முடியாது

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு டார்லி வீதியில் உள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் கடந்த வியாழன் தேர்தல் செயலகம் ஒன்றை திருமதி பண்டாரநாயக்கா அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அச் சமயம் அவர் மேலும் சொன்னதாவது;

அதிகாரத்தில்தொடர்ந்து இருப்பதற்காக தான் நினைத்த மாதிரி அரசமைப்புச் சட்டத்தை ஜனாதிபதியினால் மாற்றமுடியாது.

திரு. ஜெயவர்த்தன பற்றி நாட்டு மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியும்.

தொடர்ந்து பதவியில் இருக்கக்கூடியதாக அரசமைப்புச சட்டம் திருத்தப்படுமானால் அதை எமது கட்சி மட்டும் அல்ல ஏனைய அரசியல் கட்சிகளும் நிச்சயம் எதிர்க்கும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

பொய்யாமொழி

குறள்:

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

பொருள்:

சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், (செயலுக்கு இடையூறாக வரும்) ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர்.

உயிர்த்தெழுந்தார்

மனிதர்களே கொஞ்சம் மனதிற்குள்ளாய்
மகிழ்ந்து கொள்ளுங்கள்
மரியின் மைந்தன் உயிர்த்தெழுந்த
மகோற்சவம் இன்றென்று
மனிதர்களே கொஞ்சம் மனதிற்குள்ளாய்
மகிழ்ந்து கொள்ளுங்கள்.
மரணத்தை வென்ற மகாத்மா ஒருவன்
மகிதலம் வந்துள்ளான்,
மண்ணில் மறைந்த மாமனிதன் அவன்
மரித்துயிர்த்தெழுந்துள்ளான்
மூடன் ஒருவன் முப்பது வெள்ளிக்கு
மகிழ்வுடன் விற்றதனால்
மானமிழந்து மாளாத் துன்பம்
மௌனமுடன் பட்டு
மகா நித்திரையை மனிதருக்காய் ஏற்று
மரணபலி ஆனவன் அவனே
மன்னவன் எங்கள் மனத்தின் தலைவன்
மன்னிக்க வந்துள்ளான்
மேதினிவாழ் வோர்க்கு மேன்மைகள் அளிக்க
மகான்அவன் உயிர்த்தெழுந்தான்.
மரணத்தை வென்ற மகிமை நாளின்று
மறுபடி வந்துள்ளான் – எனவே
மனிதர்களே கொஞ்சம் மனதிற்குள்ளாய்
மகிழ்ந்து கொள்ளுங்கள்
மனிதர்களே கொஞ்சம் மனதிற்குள்ளாய்
வணங்கிக் கொள்ளுங்கள்

— ராஜ்குமார் சலேஷியஸ்

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் Processing செய்தல் இலவசம்
★ விற்பனை நிழற்படச்சுருள்கள்
KODAK – FUJI – KONICA
TUDOR – FORTE
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

உதயன்

03-04-1988 ஞாயிற்றுக்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
NEW KONICA S R V 100
நிழற்படச் சுருள்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு:-
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அமைதிப்படை - போராளிகள்

போர் குறித்து ராஜீவ் கனவுதானும் ஒருபோதும் கண்டிருக்கமாட்டார்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 3

அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சமயத்தில், இந்திய அமைதிப் படை தமிழ்ப் போராளிகளுடன் போரிட நேரிடும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்

ஐ. தே. க. தலைவர் ரஞ்சன் விஜேரத்ன முன் கண்டவாறு சொன்னார்.

பண்டாரவளையில் நடந்த ஐ. தே. க. கூட்டத்தில் பேசுகையில் திரு. விஜேரத்ன மேலும் சொன்னதாவது:

இந்திய அமைதிப் படையினரில் 400 பேர் உயிரிழந்தனர் 2,000 பேர் காயமடைந்தனர். இன்னும் சண்டை தொடர்கிறது.

பண்டாரநாயக்கா ஆட்சியில் தன் நாடு பிரிவினை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது

பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜே. வி. பியினர் கூறும் மார்க்கம், 45 வயதுக்கு மேற்பட்டோரையும் 10 வயதிற்கு உட்பட்டோரையும் கொல்வதும், தேயிலைத் தோட்டங்களில் பரவவிட வேண்டும் என்பதும் தான்.

இப்படி திரு. விஜேரத்ன தெரிவித்தார். (ஒ-எ)

நாளை திங்கள் முதல் தலைக்கு மேல் சூரியன்

கொழும்பு, ஏப்.3

நாளைமுதல் 15 ஆம் திகதி வரை சூரியன் தலைக்கு மேலாகச் செல்லும் என்று வானிலை அவதான நிலையம் அறிவிக்கின்றது.

அதனால் வெய்யில் அதிகமாக இருக்கும்.

சூரியன் தலைக்கு மேலாகச் செல்லும் இடங்களும் திகதிகளும் வருமாறு:

ஏப்ரல் 4 - தெவிநுவரை, 5 - அம்பாந்தோட்டை, 6 - களுத்துறை, 7 - கொழும்பு, 8- கேகாலை 9-மட்டக்களப்பு.

ஏப்ரல் 10 - புத்தளம், 11 - அநுராதபுரம், 12- வவுனியா, 13 - முல்லைத்தீவு. 14 - பரந்தன், 15- பருத்தித்துறை. (ஒ-எ)

பெரிய வெள்ளியன்று திருடிய இருவர்

அமைதிப்படையிடம் சிக்கினர்

குருநகர், ஏப் 3

நேற்று முன் தினம் பெரிய வெள்ளிக் கிழமை இரவு குருநகர் நவீன (சின்னக் கடை) சந்தைப் பகுதியில் திருட்டில் ஈடுபட்ட இருவர் இந்திய அமைதிப் படையினரிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

குருநகர் நவீனசந்தை உட்புறம் அமைந்துள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருள்களும், பணமும் திருடப்பட்டுள்ளதாக இந்திய அமைதிப் படையிடம் கடைக்காரர் புகார் செய்யச் சென்ற சமயம் திருடர்கள் ஏற்னவே அகப்பட்டுக் கொண்டது தெரிய வந்தது.

வெள்ளி இரவு குறிப்பிட்ட கடை உடைக்கப்பட்டு திருட்டு நடந்திருப்பதுடன் வேறு சில கடைகளின் பூட்டுகளும் உடைக்கப்பட்டு இருக்கனவாம். (ஒ-51)

கல்முனை...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

றோம்.

எடுப்பார்கைப்பிள்ளைகளாக செயற்படும் சில சக்திகளை மக்களே இனங்கண்டு தாக்கி எறியட்டும். எம்மைப் பொறுத்தவரை தமிழ்பேசும் மக்களின் ஐக்கியத்தைக் குலைக்கும் எந்த நடவடிக்கையையும் முழுமையாகத் தடுக்க முடியாத நிலையில் நாங்கள் இருப்பதை மக்கள் உணர்வர்.

இருந்தும் எம்மால் இயன்றளவு இம்மனித நாகரிகமற்ற செயலைமுடிவுக்குக் கொண்டுவரச் சகல தரப்பினரதும் ஒத்துழைப்பைக் கோருகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

தமிழ்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்போவதாக அறிவித்திருப்பது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் —

சிறையில் உள்ள இளைஞர்கள் யாவரும் இயக்க வேறுபாடு இன்றி தாங்கள் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிவித்திருக்கின்றார்கள் —

தாங்கள் வன்செயலில் ஈடுபடமாட்டோம் என்றும் உறுதி கூறும் சத்திய கடதாசியை வழங்கியுள்ள போது அரசு அவர்களை இயக்க அடிப்படையில் வேறுபடுத்தக் கூடாது — என்றார். (அ-3)

பரீட்சை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர் பிரதிநிதிகள் சார்பாகவே மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இந்திய அமைதிப் படை சிவில் நிர்வாக அதிகாரிக்கும் இந்திய உயர் ஸ்தானிகருக்கும் மனு மகஜர்கள் யாழ் நகர பிரதிக் கொமாண்டர் கேர்ணல் கங்குலியிடம் கையளிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை மேற்படி கல்லூரி மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலை செல்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-161)

பஞ்சாப்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பூட்டாசிங் நேற்றுத் தெரிவித்தார்.

பஞ்சாப் தகராறைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் புதிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என்றும் அமைச்சர் பூட்டாசிங் தெரிவித்தார். (ஒ-எ)

யாழ் அகதிகள் ஆயிரம் பேர் வருகின்றனர்

சென்னை, ஏப்.3

தமிழ்நாட்டில் இருந்து இந்த வாரத்தில் மட்டும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரம் பேர் வரையிலான அகதிகள் தாயகம் திரும்புவர்

இப்படி இந்தியமத்திய அரசு அறிவித்துள்ளது.

யாழ் மாவட்ட அகதிகள் தமிழகத்திலிருந்து அனுப்பப்படுவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

நீத்தார் பட்டியல்

கந்தையா – பஞ்சலிங்கம்
(தவனேந்திரன்)

திரு. கந்தையா – பஞ்சலிங்கம் (தவனேந்திரன்) அரசாங்க கட்டிட ஒப்பந்தக்காரர் அவர்கள் 2-4-88 ல் அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். இவர் திருமதி தங்கமணியின் அன்புக் கணவரும், செல்வி வனஜா, செல்வி ஷியாத்தா, செல்வன் செந்தில் குமரன், செல்வி கர்ஷா: செல்வன் பிரதீபன், செல்வி நிரேஜா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-4-88 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி தங்கமணி - பஞ்சலிங்கம்
திரு க. சிவசுப்பிரமணியம் (பாலா)
பலவி வீதி,
கோண்டாவில் கிழக்கு. (2389)

SCIENCE ACADEMY Jaffna
(B. M. C ச்/கு முன்பாக)
Physics Mr- சோதிலிங்கம் B. sc.
DAY CLASS (EVENING) திங்கள் - புதன் - வெள்ளி மாத்திரம்
12-30 ஒலியியல் (APRIL லீவு நாட்களில் முடிக்கப்படும்)
1 30 சடப்பொருளியல் (துரித மீட்டல்)
2-30 வெப்பவியல் (A/L 88, 89, பிரிவுகளுக்கு விரிவாக)
வகுப்புக்கள் ஆரம்பம் 4-4-88 திங்கள் 12-30 PM

S. P. ANTON
மகிழ்ச்சியுடன் வழங்கும்
உடனடிப் பயண ஒழுங்குகள்

● **குவைத், சவுதி அரேபியா**
இவ்விருநாடுகளின் சப்பற் துறைமுகங்களில் பணிபுரிவதற்குக் கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன
Supervisors Tally Clerks, Drivers, Fork Lift Operators, தச்சுவேலையாட்கள், மேசன், செக்கியூரிட்டி ஊழியர்கள், மெக்கானிக், ஸ்டோர் கீப்பர், கிளீனர்கள் மற்றும் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை.

● **அபுதாபி**
வீட்டு வேலையாட்கள், அலுவலகஉதவியாட்கள் (பியூன்), வீட்டுப் பணிப்பெண்கள்.

● **சிங்கப்பூர், கிறீஸ்**
இருநாடுகளுக்கும் ஆங்கில அறிவுடைய வீட்டு வேலைப் பணிப்பெண்கள் உடனே தேவை
சம்பளம் ரூபா 3,500/- — 6500/- வரை

● **கப்பல் வேலைவாய்ப்புக்கள்**
'Nomikos' மற்றும் தரமான கிரேக்கக் கப்பல்களில் Officer Vacancies உடன், A/B, Deck Boys, Mess Boys, Wiper முதலிய வெற்றிடங்கள் உண்டு. நம்பிக்கையுடன் பயணம் ஒழுங்கு பண்ணித் தரப்படும்

● **கனடா பயண ஒழுங்குகள்**
நம்பிக்கையான எமது முகவர் மூலம், சிங்கப்பூரில் இருந்து சிறு குழுக்களாகக் கனடாவுக்கு அனுப்பும் எமது பணி வெற்றிகரமாகத் தொடர்கிறது. அடுத்த குழுவுக்கு இன்னும் ஆறு வெற்றிடங்கள் உள்ளன விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்

✶ சவுதி அரேபியாவில் கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு பத்து நாட்களில் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும் உடனடியாகப் பயணம் மேற்கொள்ளத் தயாராயிருப்போர் மட்டும், காலம் தாழ்த்தாமல் தொடர்பு கொள்ளுங்கள்.

Land Surveyors —	SR 1200
Chain men —	SR 900-1000
Draughtsmen —	SR. 1000
Technical Assistant-	SR 800
தொழிலாளர்கள் -	SR 350
Electricians -	SR 800
Asst. Electricians	SR 700
Radiator Repairer Tinker -	SR 1000
Welder -	SR 1000

முக்கிய அறிவிப்பு:- என்னிடம் பாஸ்போட் கையளித்திருக்கும் கீழ் கண்டோர் தயவு செய்து, உடனடியாக கொழும்பில் வந்து என்னைச் சந்தியுங்கள் உங்கள் பயண ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டுள்ளன

OILERS:-
S J. செல்வலிங்கம் – யாழ்ப்பாணம்
A C. வெடிச்சந் – யாழ்ப்பாணம்
தொழிலாளர்கள்:-
S மகேந்திரன் - யாழ்ப்பாணம்
K X. செல்வநாயகம் - ஊர்காவற்றுறை
S சிவம் - இயபாலை
M H M இக்பால் – முல்லைத்தீவு
A. F. சேவியர் - யாழ்ப்பாணம்
A வேதநாயகம் – யாழ்ப்பாணம்
N சிவலேஸ்வரன் - அனலைதீவு

மற்றும் சகல விபரங்களுக்கும், உடனே நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

S. P. அன்ரன்
வேல் ரேடர்ஸ் [மக்கள் வங்கி முன்பாக]
இல 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான பெயின்ற் வகைகளையும்
நம்பிக்கையுடன் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்
வேல் ரேடர்ஸ், [மக்கள் வங்கி முன்பாக]
இல. 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [2384]

அச்சகப் பகுதி மேற்பார்வையாளர்

பத்திரிகை நிறுவனத்தில் இரவு நேர அச்சக மேற்பார்வையாளராகப் பணிபுரிவதற்கு ஒருவர் தேவை.

* விண்ணப்பதாரர் அச்சகம் சம்பந்தமான சகல பணிகளிலும் முன் அனுபவம் உள்ளவராகவும்—
★ அச்சு இயந்திரங்கள் சம்பந்தமான பூரண அறிவும், அவற்றில் ஏற்படும் பழுதுகளை இனங்காணுதல், திருத்த வேலைகளை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றில் தகுதி உள்ளவராகவும்—
★ 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராகவும்— இருத்தல் அவசியம்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கல்வித்தகைமை, வேலை அனுபவம் ஆகியவற்றை நிரூபிக்கும் சான்றிதழ்களுடனும், விண்ணப்பத்துடனும் பின்வரும் விலாசத்திற்கு நேரில் வரவும்:

உதயன் விளம்பரப் பணிமனை,
15 இரண்டாவது ஒழுங்கை.
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

கம்பியூட்டர் கல்வி
Computer Programming in Basic Language
ஆரம்பம்: 6 - 4 - 1988
பயிற்சிக் காலம்: 40 நாள்
கட்டணம் 750/- (இருபிரிவுகளாக செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்
சான்றிதழ் வழங்கப்படும்
UNIKCO
Computer Centre
No, 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (உபதபாற்கந்தோர் அருகாமை)

Computer Programming and Data Processing Course
BASIC LANGUAGE
6 Months - Weekend
by
Qualified, Experienced and dedicated panel of lecturers and instructors.
ஆரம்பம்: **9 4 88**
FEES - Rs. 1,500/-
(தவணை முறையிலும் செலுத்தலாம்.)
எமது குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals.
பயிற்சி முடிவில் சித்தியெய்துவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
HARVARD Institute
Sucessor of
CANTABIA INSTITUTE
Sister Organiation of
OXONIA, COLOMBO.
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி வீதி முடிவுக்கருகாமையில்)
Jaffna.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03-04-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications 292/2 Navalar Road, Jaffna on Sunday 3rd April 1988.